## நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களது செயல்முறை ஆணை

## முன்னிலை: வி. சசிமோகன், இ.கா.ப.

**ந.க.எண்.அ2/20591/2019** நாள்:29.01.2020
மா.ஆ.எண்.128/2020

**சிறிய தலைப்பு:** காவல்துறை - நீலகிரி மாவட்டம் - அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - பணிநியமனம் பெற்று பணிபுரிந்து வரும் திரு. G. சரவணக்குமார், த/பெ மறைந்த த.கா 1267 காந்தி என்பவரது இளநிலை உதவியாளர் தற்காலிக பணியினை வரன்முறைபடுத்தி ஆணையிடுவது - தொடர்பாக.

**பார்வை:** தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.041769/ சிஏஆர்1/2016, நாள்: 15.03.2017 மற்றும் 21.12.2017

* * * * *

**ஆணை:**

திரு. G. சரவணக்குமார், த/பெ மறைந்த த.கா 1267 காந்தி என்பவர் தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண். 1433/சி.ஏ.1/2005, நாள்: 15.07.2005 ன் படி கருணை அடிப்படையில் கணினி விபர பதிவாளராக நாகபட்டினம் மாவட்ட காவல் அலுவலகத்தில் தொகுப்பூதிய அடிப்படையில் 04.08.2005 முற்பகல் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். அரசாணை 4 (டி) எண்.52, உள் (காவல்-15) துறை, நாள்: 22.06.2007 மற்றும் தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.8639/சி.ஏ.1/2007, நாள்: 29.06.2007ன் படி தொகுப்பூதிய அடிப்படையிலிருந்து 3050-75-3950-80-4590 என்ற காலமுறை ஊதிய விகிதம் அடிப்படையில் 01.05.2007 முதல் மாற்றம் செய்யப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், இவரது தற்காலிக கணினி விபர பதிவாளர் பணி அரசாணை நிலை எண்.220, உள் (காவல்-15) துறை, நாள்: 18.02.2016 மற்றும் தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.175817/A&R/2007, நாள்: 14.03.2016 பிரகாரம் 01.05.2007 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து, இம்மாவட்ட ஆணை எண். 433/2016, ந.க.எண்.அ2/4674/16, நாள்: 17.03.2016-ன் படி ஆணையிடப்பட்டுள்ளது.

2) மேலும், தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.179367/NGB II (2)/2019, நாள்: 20.09.2019-ன் படி மேற்படி கணினி விபர பதிவாளர் இளநிலை உதவியாளர் பதவிக்கு பணி மாற்றம் செய்யப்பட்டு, நீலகிரி மாவட்ட காவல் அலுவலகத்திலேயே பணியமர்த்தப்பட்டுள்ளார். இவ்வலுவலக ஆணை எண் 1242/2019, ந.க எண் 16692/அ2/2019, நாள் 26.09.2019 ன்படி மேற்படி கணினி விபர பதிவாளர் 21.09.2019 மு.ப அன்று நீலகிரி மாவட்ட காவல் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிக்கு அறிக்கை செய்துள்ளார்.

3) இவரது மூலக்கோப்பை பரிசீலனை செய்ததில், மேற்படி இளநிலை உதவியாளரின் தகப்பனார் 28.03.2000 அன்று இறந்துள்ளார். மறைந்த அரசு ஊழியரின் மனைவி தனது மகனுக்கு (G. சரவணக்குமார்) காவல் துறையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 05.04.2000 அன்று நாகபட்டினம் மாவட்ட காவல் அலுவலகத்தில் மனு சமர்ப்பித்துள்ளார். மேலும், மேற்படி மறைந்த அரசு ஊழியரின் மகன் திரு. G. சரவணக்குமார் என்பவர் 29.09.2001 அன்று தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி மனு சமர்ப்பித்துள்ளார். மறைந்த அரசு ஊழியரின் மனைவி தன் மகனுக்காகவும் மற்றும் மகன் ஆகியோர் அரசு ஊழியர் இறந்த மூன்று ஆண்டுகளுக்குள் மனு சமர்ப்பித்துள்ளனர். மனு சமர்ப்பித்த நாளன்று மனுதாரர் இளநிலை உதவியாளர் பணி நியமனத்திற்கு தேவையான 10ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளார். மேற்படி 10ம் வகுப்பு சான்றிதழின் உண்மை தன்மை சரிபார்க்கப்பட்டு உண்மைத்தன்மை வாய்ந்தவை என இணை இயக்குநர் (பணியாளர்) அரசுத் தேர்வுகள் இயக்கம் சென்னை அவர்களின் கடித ஒ.மு எண் 129703/வி4/2019 நாள் 17.12.2019 மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) மறைந்த அரசு ஊழியரின் மனைவி தன் மகனுக்காகவும் மற்றும் மகன் ஆகியோர் அரசு ஊழியர் இறந்த மூன்று ஆண்டுகளுக்குள் மனு சமர்ப்பித்துள்ளதாலும், மனு சமர்ப்பித்த நாளன்று மனுதாரர் இளநிலை உதவியாளர் பணி நியமனத்திற்கு தேவையான 10ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளதாலும், அரசாணை நிலை எண்.560 தொ (ம) வே.வா.துறை, நாள்: 03.08.1977 மற்றும் அரசாணை நிலை எண்.202 தொ (ம) வே.வா.துறை, நாள்: 08.10.2007-ன் படி விதி தளர்வு தேவைப்படாது என்பதாலும், விதி தளர்வு தேவைப்படாத தனியர்களுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறத்தேவையில்லை என்ற விதிகளின் அடிப்படையில் இவரது தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியினை அவர் இளநிலை உதவியாளராக பணிக்கு அறிக்கை செய்த நாளான **21.09.2019 அன்று முற்பகல்** முதல் பணி வரன்முறைப்படுத்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

ஒம்;/- வி. சசிமோகன்,
காவல் கணிகாணிப்பாளர்,
நீலகிரி மாவட்டம்.

பெறுநர்,

திரு. G. சரவணக்குமார்,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட காவல் அலுவலகம், நீலகிரி மாவட்டம்.
நகல்: காவல்துறை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை - 04.

-/உ.ந.உ.ப.அ/-

கண்காணிப்பாளர்